**தலைப்பு 283 – வன பாதுகாப்புத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

வன பாதுகாப்புத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரச கணக்குகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது 09 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2021 மார்ச் 09 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் நிதிக்கூற்றுக்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மும்மொழிகளிலும் | கடந்த ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்கள் தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் தேவையின் பிரகாரம் தமிழ் மொழியிலும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச கணக்குகள் திணைக்களத்தால் விநியோகிக்கப் படுகின்ற வழிகாட்டியின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 மே மாதம் 03 ஆந் திகதி வரையிலும் தமிழ் மொழியிலான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | வழிகாட்டியின் பிரகாரம் விடய இலக்கம் 283011-283012 என்ற அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று 2021 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 24 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2021 மார்ச் 24 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பத்திற்காக 2021.05.25 ஆந் திகதி 04 பிரதிகளுடன் அமைச்சிற்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பிரதிகள் கையொப்பமிடப்பட்ட பின்னர் மார்ச் மாதம் 24 ஆந் திகதியே திணைக்களத்திற்கு கிடைத்திருந்தது. | - மேற்படி - |

### 1.6.2 நிலுவை வருமானம்

திணைக்களத்துக்குரிய நிலுவை வருமான அறிக்கையிடும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் வருமான கணக்கின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் நிலுவை வருமானம் ரூபா 983,982 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் வருமானக் கணக்கில் ஆரம்ப நிலுவை வருமானமாக ரூபா 1,216,082 தொகை காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 232,100 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மொத்த வருமானங்களையும் கணக்கீடு செய்யும் போது கூட்டலில் வழுக்கள் ஏற்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டின் போது அந்த தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வலஸ்முல்ல வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற மர தொழில்முயற்சிகளை பதிவு செய்தல் புதுப்பிக்கப்படாமையினால் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட ரூபா 134,052 நிலுவை வருமானம் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது. | அம்பாந்தோட்டை மாவட்ட வன அலுவலகத்தின் மூலம் தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் தகவல்கள் கிடைத்ததும் உடனடியாக இதற்கான பதில் சமர்ப்பிக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம். | தொழில் முயற்சிகளை பதிவு செய்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு நிலுவை வருமானங்களை அறிக்கை யிடுவதற்கு உரிய உத்தியோகத்தர் கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திஸ்ஸமகராம கல் குவாரியொன்றுக்காக திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய அனுமதிப் பத்திர கட்டணம் ரூபா 1,440,000 மற்றும் 268.2 கல் கியூப்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 201,150 நிலுவை தொகை நிலுவை வருமானமாக கணிப்பிடப் பட்டிருக்கவில்லை. | அம்பாந்தோட்டை மாவட்ட வன அலுவலகத்தின் மூலம் தகவல் கிடைத்ததும் உடனடியாக பதிலளிக்கப்படும். | கல் குவாரி பேணிச் செல்லல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை ச் செய்து உரிய வருமான கணக்குகளுடன் அறிக்கையிடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அம்பாந்தோட்டை மாவட்ட வன அலுவலகத்திற்குரிய 04 கல் குவாரிகள், அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள கல்லின் அளவை விஞ்சி அகழ்ந்தமையின் காரணமாக திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 34,916,952 நிலுவை வருமானம் கணிப்பிடப் பட்டிருக்கவில்லை. | அம்பாந்தோட்டை மாவட்ட வன அலுவலகத்தின் மூலம் தகவல் கிடைத்ததும் உடனடியாக பதிலளிக்கப்படும். | அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அகழ்வு கல்லின் அளவை விஞ்சி மேற்கொள்ளப் பட்ட அகழ்வுகளுக் குரிய கட்டணம் அறவிட வேண்டியிருந்த துடன் அனுமதிப்பத்திர எல்லையை விஞ்சி அகழ்தல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) திஸ்ஸமஹாராம மற்றும் வலஸ்முல்ல வன அலுவலகத்திற்குரிய ஒதுக்க காடுகளில் பேணிச் செல்லப்படுகின்ற 02 பரிவர்த்தனை கோபுரங்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 3,018,160 கூட்டுத்தொகை நிலுவை வருமானமாக கணிப்பிடப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | வருமானங்களை சரியாக இனங்காணல் வேண்டும். |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டிற்காக பொறுப்பு பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 1,216,082 நிலுவை வருமான அறவிடல்களை உறுதிப்படுத்துவதற்காக போதியளவான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடல் தொடர்பான அறிக்கை பிரதான அலுவலகத்தினால் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் மாவட்ட வன அலுவலகங்களில் பேணிச் செல்லப்படுகின்றது. எதிர்காலத்தின் போது மாவட்ட வன அலுவலகங்களில் அந்த அறிக்கையை பெற்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதான அலுவலகத்தால் பிரதேச அலுவலக நடவடிக்கைகள் நிரந்தரமாக மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட்டு உரிய அறிக்கை சரியாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டியமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்பட்ட பிரச்சினைகளுக்கு பதவிநிலை உத்தியோகத்தர் கூட்டத்தை நடாத்தி கலந்துரையாடப்பட்டு பொருத்தமான பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் நிதிக் கட்டுப்பாடு தொடர்பான மீளாய்வொன்றை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான கவனத்திற்கு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 104(1), 104(3) | 2018 யூலை 29 ஆந் திகதி விபத்துக்குள்ளாகிய வாகனம் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்படாதிருந்த துடன் விபத்து தொடர்பான பூரண அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 இன் நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் அந்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகன விபத்து ஏற்பட்டிருக்குமாயின் அது தொடர்பாக அறிவிக்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் இழப்பு நட்டம் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 396(ஈ) | விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களை விட விஞ்சியிருந்த 157 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான அலுவலகத்தில் இலக்கம் 7042475 என்ற வங்கிக் கணக்கில் வருடம் ஒன்றுக்கு மேற்பட்ட பழைய சமர்ப்பிக்கப்படாத 02 காசோலைகள் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 9,923.40 ஆகும். ஏனைய காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய வங்கிக் கணக்குகளின் காசோலைகள் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்பாக உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | நிதிப்பிரமாணம் 565(5) | பொது 71 மாதிரி படிவத்தில் தயாரிக்கப்படுகின்ற மாதாந்த வைப்பு பொழிப்பு கூற்று அடுத்து வரும் மாதத்தின் இறுதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமரப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த பொழிப்பு கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது 71 மாதிரி படிவம் எங்கள் திணைக்களத்தில் பயன்படுத்தப்படுவதில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2004 மற்றும் நிதிப்பிரமாணம் 507 மற்றும் 756 | திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டு நிதிப் பிரமாணம் 128 இன் கீழ் குறிப்பிடப்பட்டகால அட்டவணையில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 மே 05 ஆந் திகதி வரையிலும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வலய அலுவலகங்களில் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளமையால் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம். | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2004 மற்றும் நிதிப்பிரமாணம் 128 இன் கீழ் குறிப்பிடப்பட்ட கால அட்டவணையில் பொருள் மெய்மையாய்வு கட்டாயமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 மாதங்கள் முதல் 05 வருடங்களை விஞ்சியிருந்த கூட்டுமொத்தமான ரூபா 11,247,901 கடன் மீதியொன்று காணப்பட்டதுடன் அவற்றை அறவிடல் தொடர்பாக தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த தகவல்கள் கிடைத்ததும் உடனடியாக பதில் சமர்ப்பிக்கப்படும். | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதும் அந்த கடன் பணத்தை அறவிடுவதற்காக முகாமைத்துவத்தால் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சி செய்யப் பட்டிருக்கவில்லை |

## 2.4 வைப்பு மீதிகள்

வைப்பு மீதிகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு இருந்தது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 வருடங்களை விஞ்சிய கூட்டுமொத்தமாக ரூபா 352,036,248 தொகையான வைப்பு பணம் நிதிப் பிரமாணம் 570(2) இன் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது மொத்த வைப்புத் தொகையில் 48.57 சதவீதமாகும். | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டிருந்த போதிலும் தனியார் வன பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டு வைப்பு செய்யப்பட்டுள்ள பணம் அந்த செயற்திட்டம் முடிவடையும் வரை வைப்புக் கணக்கில் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த செயற்திட்டம் அவ்வவ்போது மேற்கொள்ளப்படுகின்ற சுற்றாடல் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மற்றும் இழப்பீட்டு சேதங்களுக்காக அந்த பணம் செலவிட வேண்டியிருந்தது என்பதை | சில வைப்புக்கள் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் எந்தவொரு செலவினமும் மேற்கொள்ளப் படாமல் கொண்டு வரப்பட்டிருந்தமையால் உரிய செயற்திட்டம் மேலும் அமுல்படுத்தப்படுகின்றதா,இல்லையாயின் பூர்த்தி செய்யப் பட்டிருக்கின்றதா |

| | | |
|---|---|---|
| | தயவுடன் அறியத்தருகின்றோம். | என பின்தொடர் நடவடிக்கைகளை செய்து நிதிப் பிரமாணம் 571(2) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திஸ்ஸமகராம வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற காட்டுப் பிரதேசம் 9,781 ஹெக்டயர்களாக இருந்த போதிலும் அதில் ஒதுக்க காட்டுப் பிரதேசமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அளவு 3,336 ஹெக்டயர் ஆனமையால் 06 காட்டுப் பிரதேசங்களின் 6,445 ஹெக்டயர் அளவான காணி அளவு அதாவது மொத்த காட்டு நிலத்தில் 65 சதவீதம் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அம்பாந்தோட்டை மாவட்ட வன அலுவலகத்தின் மூலம் தகவல்கள் கிடைத்ததும் உடனடியாக பதில் சமர்ப்பிக்கப்படும். | திணைக்களத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணிகளை செயற்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஆ) | அம்பாந்தோட்டை வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 1,361.55 ஹெக்டயர் அளவான 03 காட்டுப் பிரதேசங்கள் அளக்கப்பட்டிருந்த போதிலும் 03 வருடங்களை | -மேற்படி- | அளவிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள காட்டுப் பிரதேசங்களை வர்த்தமானியில் |

| | | |
|---|---|---|
| விஞ்சியிருந்தும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) அம்பாந்தோட்டை மாவட்ட வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற 3,700.73 ஹெக்டயர் அளவான 10 காட்டுப் பிரதேசங்களில் பாதுகாக்கப்பட்ட காட்டுப் பிரதேசமாக பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட போதிலும் அந்த காட்டுப் பிரதேசங்களை அளந்து விரைவாக பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக பிரசுரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக காட்டுப் பிரதேசங்கள் அனுமதியற்ற வகையில் பிடித்துக் கொள்ளல், காடுகளை வெட்டவெளியாக்கி பயிரிடல், பிரதேச செயலகங்களில் இருந்து திணைக்களத்தின் பரிந்துரையின்றி அனுமதிப் பத்திரம் விநியோகித்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல் வன அலுவலகங்களுக்கு ஏற்பட்டிருந்தது. | - மேற்படி - | பாதுகாக்கப்பட்ட காட்டுப் பிரதேசமாக பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட காட்டுப் பிரதேசம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2020/02 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் அரச நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் மற்றும் 2018 | வலய அலுவலகங்கள் மூலம் தகவல்கள் சேகரித்து செயலாற்றல் அறிக்கை தயாரித்தல் மேற்கொள்ளப் படுவதுடன் அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |

இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உத்தியோகத்தர்களுக்காக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 14 உத்தியோகபூர்வ இல்லங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 11 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. மேலும் வலஸ்முல்ல -- வன அலுவலகத்திற்குரிய 03 உத்தியோகபூர்வ இல்லங்கள் சேதத்திற்கு உட்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்வாகம் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | அரசாங்க வளங்களிலிருந்து ஆகக்கூடிய பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக செயற்திறனாக பயன்படுத்து வதற்கு திட்டங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அம்பாந்தோட்டை மாவட்ட வன அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட 02 கெப் வண்டிகள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் 11 மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படாமல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருக்குமாயின் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

## 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நட்டம் ரூபா 25,000 இற்கு குறைவான 19 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 215,277 தொகையும், நட்டம் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட 59 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 21,516,869 தொகையும் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 6,144,377 தொகையான நட்டப் பெறுமதியுள்ள 28 சந்தர்ப்பங்களில் நட்டம் ஏற்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. எனினும் இந்த நட்டம் மற்றும் கைவிடல்களை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பிரிவுகளினதும் அறிக்கைகள் கோரப்பட்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 15 சம்பவங்களை புத்தங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் புத்தகத்தில் இருந்து அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த கூட்டுமொத்தமாக ரூபா 227,725 தொகையான இழப்பு மற்றும் நட்டங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 53-9220, 120-4453, 26ஸ்ரீ588 ஆம் இலக்கங்கள் கொண்ட வாகனங்கள் தொடர்பாக அகற்றும் கட்டளை கிடைக்கப்பெறவில்லை. உரிய பிரிவுகளில் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். | நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2004 பெப்ரவரி 11 ஆந் திகதி இழப்பிற்கு உட்பட்டிருந்த 53-5103 ஆம் இலக்க கெப் வண்டி தொடர்பாக உரிய பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டு பொறுப்பு | 53-5103 ஆம் இலக்க கெப் வண்டிக்கு பணம் அறவிடப்பட்டமைக்கு திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. உரிய அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வாய்ந்த உத்தியோகத்தரிட மிருந்து 2017 ஆம் ஆண்டின் போது பணம் அறவிடப்பட்டிருந்த போதும் நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டு நிதிக் கூற்று அட்டவணை (i) இலும் அந்த மீதி காண்பிக்கப்பட்டிருந்தது. | வழக்கு அறிக்கையை பெற்று எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற மையால் இந்த அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஏற்பட்டிருந்த ரூபா 40,600 நட்டங்களை உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியிருந்தமையால் நிதிப்பிரமாணம் 104 இன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களிலும் அவை முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்து வதற்கு வழக்கு அறிக்கை கோரப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் வருகின்ற நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பாக கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட அறவிடல்கள் மற்றும் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படாத சகல விபத்துகளுக்கும் உரிய நட்டங்கள் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணை (i) இல் உள்ளடக்க வேண்டிய போதிலும் அட்டவணை (i) இல் உள்ளடக்கப்படாத 04 இழப்புக்களின் பெறுமதி ரூபா 1,152,090 ஆகும். | 2019 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்ட இலாப நட்ட இழப்புக்கள் மாத்திரம் 2020 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இந்த 04 வாகனங்கள் 2019 அல்லது அதற்கு பின்னர் இழப்பு நட்டங்களில் உள்ளடக்கப் படாதிருந்தமையால் 2020 ஆம் ஆண்டின் போதும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . எனினும் 2021 ஆம் ஆண்டுக்காக அவை நட்ட இழப்பு பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் மாதிரியின் பிரகாரம் உரிய தகவல்கள் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது அம்பாந்தோட்டை ரண்முதுவெவ வனத்தில் பின்பகுதி மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்காத கன்றுகளை நாட்டியதன் காரணமாக கன்றுகளில் 50 சதவீதம் அளவு இறந்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போதும் மீண்டும் ரூபா 540,408 செலவில் கன்றுகள் நடப்பட்டிருந்தன. 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கன்றுகளுக்காக தண்ணீர் பாய்ச்சும் முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீண்டும் நடப்பட்ட கன்றுகளும் இறந்து செல்லும் ஆபத்திற்கு உட்பட்டிருந்தது. | அம்பாந்தோட்டை வன அலுவலகத்தின் தகவல்கள் கிடைத்ததும் உடனடியாக பதில் சமர்ப்பிக்கப்படும். | பிரதேச ரீதியில் காணப்பட்ட கால நிலைமையின் அடிப்படையில் பிரதேசத்திற்கு பொருத்தமான பிரகாரம் வன பயிர்ச் செய்கைகளை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது தற்காலிக நடமாடும் முகாம்களை பேணிச் செல்வதற்காக 22 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் அதற்காக அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. திஸ்ஸமஹாராம வனப் பிரதேசத்திற்குரியதாக நிமலவ அரசாங்கத்தின் வனத்தில் 20 முகாம்கள் அனுமதியின்றி பேணிச் செல்லப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் காணியின் உரித்தை மீளக் கையேற்கும் சட்டத்தின் | - மேற்படி - | காணியின் உரித்தை மீளக் கையேற்கும் சட்டத்தின் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்து அந்த முகாம்களை அகற்றுவதற்கோ அல்லது புதிய அனுமதிப் பத்திரத்தை வழங்கி வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் பேணிச் செல்வதற்கு அனுமதி வழங்குவதற்கோ |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுத்து அந்த முகாம்களை, அகற்றுவதற்கோ அல்லது புதிய அனுமதிப்பத்திரத்தை வழங்கி வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்குவதற்கு அல்லது இந்த இரண்டினையும் விட மிகவும் பொருத்தமான நடவடிக்கையினை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அல்லது இந்த இரண்டினை விட மிகவும் பொருத்தமான நடவடிக்கை யினை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | அம்பாந்தோட்டை கொஹொலங்கல எஞ்சியுள்ள வனப் பிரதேசத்தில் கெலிகம கெமகம நிலத்தில் பேணிச் செல்லப்படுகின்ற கல் குவாரிக்காக புவிச் சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் வழங்கிய அகழ்வு அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் அம்பாந்தோட்டை பிரதேச செயலகம் கட்டணம் அறவிடப்பட்டிருந்தமையால் 2009 ஆம் ஆண்டு முதல் மாதாந்தம் வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ரூபா 36,000,000 வீதமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அம்பாந்தோட்டை வன அலுவலகத்தின் மூலம் தகவல்கள் கிடைத்தவுடன் பதில் சமர்ப்பிக்கப்படும். | வருமாங்களை சேகரிக்கும் போது கருங்கல் உடைத்தல் தொடர்பாக சரியாக மேற்பார்வை யொன்று பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த துடன் சரியான கணப்பீட்டின் கீழ் வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிரேஷ்ட நிலை, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் சிற்றூழிய சேவையில் முறையே 36, 18, 323 மற்றும் 288 ஆக 665 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த தகவல்கள் கிடைத்ததும் உடனடியாக பதிலளிக்கப்படும். | அத்தியவசிய பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |